# வாழிய மணமக்கள்!

# மணவிழா வாழ்த்து!

செல்வன்: **விக்னேஷ்** செல்வி: **ஜெயதேவி**

## நாள்: 10-02-2023 இடம்: காஞ்சி



மெத்த ஓர்பெருமை கொண்டு,
மேதினியில் வாழ்ந்தி ருந்து,
கைத்தலம் பற்றிய **செல்வ சுந்தரி**யுடன்,
சீர்மிகு மகனாம் **விக்னேஷ்** தன்னை;
முத்தாய்ப் பெற்ற சீர் **ஆசைத்தம்பி,**
முடிவிலாக் கீர்த்தி பெற,
வைத்தாளும் சீர் பெருமையுடன்,
வளமிகு **ஜெயதேவி** தன்னை;

கைத்தலம் பற்றியே மண்ணில்,
மனையறம் காண விழைந்து,
கொத்தாக உறவும் நட்பும்;
கொண்டுசீர் மேவ **காஞ்சி**யில்,
மத்தளம் முழங்க வரிசங்கம்
நின்றோத காணும் **மணவிழா**வில்,
முத்தாக **துரைராஜ் - இராஜகுமாரி**யுடன்
முடிவிலாப் பெருமை கொண்டார்!



எத்திக்கும் பெருமை சொல்லும்,
என்தமிழாய் சீர்இளையர் வாழ்ந்திட,
முத்தாக நலம்பேசும் இணையராக,
முடிவிலாக் கீர்த்தியுடன் வாழ்ந்திட;
கொத்தாக நல்லன்பு கொண்ட,
குறைவிலா நட்புடனே நிறைந்து,
வித்தகனாம் இறையருளை வேண்டி,
விருப்பமுடன் மகிழ்ந்து வாழ்த்துவேனே!



- அன்புடன்,

**கு.ப. அசோகன்,**

10-02-2022—சென்னை—73

